MCOP.No. 2/2021

Date : 17.04.2026

Witness Name & Rank – லட்சுமி – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. எனக்கு என்ன வயது ஆகிறது என்றால் 66 ஆகும். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். நான் பல்லடம் – பொள்ளாச்சி சாலையில் நடந்து சென்ற போது இருசக்கர வாகனம் மோதியதாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சாலையை கடந்த போது விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் சாலையை கடக்க முற்பட்ட போது இருபக்க சாலையையும் கவனித்து கடக்க முயன்றிருந்தால் விபத்து நேர்ந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் இந்த வழக்கில் மேற்படி 2வது எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு விதிமுறை மீறல் உள்ளதால் 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.
2. மேலும் 1வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என காவல் துறையினரின் இறுதி அறிக்கையான ம.சா.ஆ.3 ல் தெரியவருகிறது என்றால் சரிதான். மேற்படி விபத்து சமயம் கொரோனா பெருந்தொற்று தடை காலம் என்றால் சரிதான். நான் 3 நாட்கள் மருத்துவ சிகிச்சைக்கு பிறகு விபத்திற்காக தொடர் சிசிக்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே எனக்கு மேற்படிவிபத்தில் ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணம் அடைந்துவிட்டது எனவே எனக்கு விபத்தால் நிரந்தர ஊனமோ அல்லது வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. **வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ. 10 மருத்துவ பில்கள் மற்றும் ம.சா.ஆ. 11 மருத்துவ விடுப்பு ஆகியவை நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவே நகல் ஆவணத்தின் அடிப்படையில் ம.சா.ஆ 10 மருத்துவ பில்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.** பல பிரிவுகளில் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது எனவே அவை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து நடந்துள்ளதாலும் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் 3 வது எதிர்மனுதாரருக்கு எதிராக மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.